2022 மே 6]

(ஆ) உடுக்குறியிடாத வினாக்கள் (பட்டியல் 2 முதல் 5 வரை)@

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்–விடைகள் நேரம் முடிவுற்றது.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. தகவல் கோரல்

(அ) திருப்பூர் மாவட்டம், ரங்கம்பாளையம் கிராமம் மற்றும் ஈரோடு மாவட்டம், முருங்கத்தொழுவு கிராமம், முதியோர் கொலையுண்டது மற்றும் 19–4–2022 அன்று சென்னையில் கைது செய்யப்பட்ட திரு. விக்னேஷ் உயிரிழந்தது

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த . . . (குறுக்கீடு) மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

திரு. எடப்பாடி K. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூர் மாவட்டம், காங்கேயம் வட்டம், தம்மரெட்டிபாளையம் ஊராட்சியில், ரங்கம்பாளையம் கிராமத்தில் ஏழரை பவுன் நகைக்காக 14–12–2021 அன்று 65 வயது முதியவர் பழனிச்சாமி மற்றும் அவரது மனைவி வள்ளியம்மாள், வயது 61 ஆகிய இருவரையும் கொள்ளையர்கள் தலையில் தாக்கி, கயிற்றால் கழுத்தை நெரித்து கொலை செய்துள்ளனர். இவர்கள் இருவரும் தனியாக அவர்கள் வீட்டில் வசித்து வந்ததாகக் கூறப்படுகிறது. இதுவரை கொள்ளையர்களைப் பற்றிய துப்பு துலங்கவில்லை என்று கூறப்படுகிறது. தனியாக வசிக்கும் முதியவர்களைத் தாக்கி இந்த இரு கொலைகள் நடந்துள்ள நிகழ்வுகள், இப்பகுதி மக்களிடையே ஓர் அச்ச உணர்வை ஏற்படுத்தியுள்ளது.

மற்றொரு நிகழ்வில், ஈரோடு மாவட்டம், பெருந்துறை வட்டம், முருங்கத்தொழுவு கிராமத்தில் உப்பிலிபாளையம் அருகில் 68 வயது முதியவர் திரு. கே.சி. துரைசாமி என்பவர் கொள்ளையர்களால் தலையில் தாக்கப்பட்டு, கழுத்தறுக்கப்பட்ட நிலையில் கொலை

@ 213 முதல் 881 வரையிலான பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.

செய்யப்பட்டுள்ளார். அவரது மனைவி தலையில் தாக்கப்பட்டு, தீவிர மருத்துவ சிகிச்சையில் உள்ளார். இச்சம்பவத்தில் இருபத்தி ஏழரை பவுன் நகைகள் களவு போயுள்ளன.

இன்றைய காலகட்டத்தில் பெரும்பான்மையான முதியவர்களின் மகனோ, மகளோ திருமணமாகி வெளிமாவட்டத்தில், வெளி மாநிலத்தில், வெளிநாடுகளில் வசிக்கும் சூழ்நிலை உள்ளது. எனவே, பெரியவர்கள் தங்களது இறுதி காலத்தை, தாங்கள் பிறந்த சொந்த ஊரில், தங்களுக்குச் சொந்தமான நிலத்தில் அமைதியாக வாழ்வதையே விரும்புகின்றார்கள். அவர்களுக்குத் தகுந்த பாதுகாப்பு அளிப்பது அரசின் கடமை; காவல் துறையின் பணி ஆகும். ஆனால், சில காலமாக இதுபோன்று தனியாக வசிக்கும் முதியவர்கள் குறிவைத்துத் தாக்கப்படுவதும், கொடூரமாகக் கொலை செய்யப்படுவதும், அவர்களது நகைகள் கொள்ளையடிக்கப்படும் செய்திகளும், தமிழகத்தில் தனியாக வசிக்கும் வயதானவர்களிடையே ஒரு பதற்றத்தை, அச்ச உணர்வை ஏற்படுத்தியுள்ளன. நான் இந்த இரு நிகழ்வுகளைப் பற்றி மட்டும் குறிப்பிட்டுள்ளேன். இதுபோல், பல நிகழ்வுகள் நடந்திருக்கலாம். எனவே, தமிழக காவல் துறை அனைத்து சம்பவங்களையும் தீவிரமாக விசாரித்து, குற்றவாளிகளை விரைவில் கண்டுபிடிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பாக, இதுபோன்று தனிமையில் வாழும் வயதான தம்பதியினருக்கும், தனியாக வசிக்கும் வயதானவர்களுக்கும் முழு அளவில் காவல் துறை பாதுகாப்பு வழங்க வேண்டும் என்று அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அதேபோல், விக்னேஷ் மரணம் குறித்து. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஏற்கெனவே இதுகுறித்து பேசி, மாண்புமிகு முதல்வர் அவர்களும் பதில் சொல்லியுள்ளார்கள்.

திரு. எடப்பாடி K. பழனிசாமி: 26–4–2022 அன்று நான் ஒரு சிறப்புக் கவன ஈர்ப்பு அறிவிப்பு கொண்டு வந்தேன். அதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பதில் அளித்தார்கள். பதில் அளிக்கின்றபோது, 19–4–2022 அன்று கைது செய்யப்பட்ட இருவருக்கும் காலை உணவு வழங்கப்பட்டதாகவும், உணவு சாப்பிட்டபின் விக்னேஷுக்கு வாந்தி, வலிப்பு வந்ததால், தனியார் மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டு, பின்னர் மேல் சிகிச்சைக்காக கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சேர்க்கப்பட்டு, அங்கு மருத்துவ சிகிச்சை அளிக்கின்றபோது

2022 மே 6] [திரு. எடப்பாடி K. பழனிசாமி]

மருத்துவர்கள் அவர் இறந்துவிட்டதாகக் கூறியதாகவும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

ஆனால், சமீபத்தில் வெளியான விக்னேஷின் உடற்கூறு ஆய்வு அறிக்கையின்படி அவரது உடலில் 13 இடங்களில் காயங்கள் இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. குறிப்பாக, அவரின் தலையில் பலத்த காயமும், முகத்தின் தாடை பகுதி, தோள்பட்டை, இடது தொடையின் நடுப்பகுதி முதல் கீழ்முட்டி வரை என பல்வேறு இடங்களில் இரத்தக் காயங்கள் ஏற்பட்டு, அதிகமான இரத்தக் கசிவு ஏற்பட்டுள்ளதாகவும், வலது கால் எலும்பு முறிவு மற்றும் பாதங்களில் காயம் ஏற்பட்டு, 13 இடங்களில் அவருக்குப் பலத்த காயம் ஏற்பட்டுள்ளதாக பிரேதப் பரிசோதனை அறிக்கை தெரிவிக்கிறது.

விக்னேஷ் மரணம் குறித்து சட்டமன்றத்தில் மாண்புமிகு முதலமைச்சர் 26–4–2022 அன்று தெரிவித்த தகவலுக்கும், தற்போது வெளியாகியுள்ள உடற்கூறு ஆய்வு அறிக்கையில் உள்ள தகவலுக்கும் முரண்பாடு உள்ள காரணத்தினால், இந்த மரணத்தில் மிகப்பெரிய சந்தேகம் எழுந்துள்ளது. எனவே, இந்தக் கொலையில் சம்பந்தப்பட்டவர்கள்மீது கடுமையான நடவடிக்கை எடுத்து, கொலை வழக்கு பதிவு செய்ய வேண்டும். மேலும், இந்த வழக்கு நேர்மையாக, முறையாக நடைபெற இந்த வழக்கை சி.பி.ஐ. இடம் ஒப்படைக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகின்றேன்.

முற்பகல் 11–25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், விக்னேஷ் மரணம் குறித்தும், ஈரோடு மற்றும் திருப்பூர் மாவட்டங்களில் நடைபெற்ற சம்பவங்கள் குறித்தும் இந்த அரசினுடைய கவனத்தை ஈர்க்கக்கூடிய வகையிலே இங்கே உரையாற்றியிருக்கிறார்கள்.*

சென்னையைச் சேர்ந்த விக்னேஷ் என்ற இளைஞர் வாகனச் சோதனையின்போது, கஞ்சா மற்றும் மது பாட்டில்கள் வைத்திருந்ததையொட்டி, அவர் கைது செய்யப்பட்டு

[திரு. மு.க. ஸ்டாலின்] [*2022 மே 6*

காவல் நிலையத்தில் விசாரணையின்போது உடல் நலம் குன்றி மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டபோது உயிரிழந்துள்ளார் என்பது குறித்து ஏற்கெனவே இந்த அவையிலே சிறப்புக் கவன ஈர்ப்புத் தீர்மானம் கொண்டுவந்து, எதிர்க்கட்சித் தலைவர் மட்டுமல்ல, இந்த அவையில் உள்ள கட்சித் தலைவர்களும், உறுப்பினர்களும் இங்கே பேசியிருக்கிறார்கள்.

அப்போது நான் பதிலளித்துப் பேசிய நேரத்தில், 'விக்னேஷ் இறப்பு குறித்து "சந்தேக மரணம்" என முறைப்படி வழக்குப் பதிவு செய்து, மேஜிஸ்ட்ரேட் விசாரணை நடைபெற்று வருகிறது. விக்னேஷினுடைய உடல் 20–4–2022 அன்று மேஜிஸ்ட்ரேட் அவர்கள் முன்னிலையில், மருத்துவக் குழுவினரால் உடற்கூராய்வு செய்யப்பட்டிருக்கிறது என்றும், இது வீடியோமூலம் முழுமையாக பதிவு செய்யப்பட்டிருக்கிறது என்றும், பிரேதப் பரிசோதனை முடிவுற்ற பின்னர், அன்றையதினமே உறவினர்களிடம் முறைப்படி விக்னேஷினுடைய உடல் ஒப்படைக்கப்பட்டது' என்ற விவரத்தை எல்லாம் நான் அன்றைக்குத் தெரிவித்திருந்தேன்.

மேலும், 'இந்த வழக்கானது, சந்தேக மரண வழக்காகப் பதிவு செய்யப்பட்டு விசாரணையில் உள்ள நிலையில், தலைமைச் செயலகக் காலனி காவல் நிலைய உதவி ஆய்வாளர் புகழும் பெருமாள், காவலர் பொன்ராஜ், ஊர்க் காவல் படைக் காவலர் தீபக் ஆகியோர் தற்காலிகப் பணி நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள். மேலும், காவல் துறை இயக்குநர் அவர்கள் மேல் விசாரணைக்காக இவ்வழக்கினை 24–4–2022 அன்று சி.பி.சி.ஐ.டி.–க்கு மாற்றம் செய்து உத்தரவிட்டிருக்கிறார். ஆகவே, விக்னேஷ் மரணம் தொடர்பாக சட்டப்படியான அனைத்து நடவடிக்கைகளையும் முறையாக அரசு எடுத்து வருகிறது' என்று நான் தெரிவித்திருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

தற்பொழுது கிடைத்துள்ள விக்னேஷ் அவர்களின் உடற்கூராய்வு முடிவுகளின்படி, எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, அவருடைய உடலில் 13 இடங்களில் காயங்கள் கண்டறியப்பட்டுள்ளதாக அந்த அறிக்கையிலே சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது. இதனடிப்படையில், இன்று இந்த வழக்கானது, கொலை வழக்காக மாற்றப்பட்டு, காவலர்கள்மீது கொலை வழக்குப் பதியப்பட்டு, விசாரணையினைத் தொடர்ந்து நடத்திட CB–CID போலீசாருக்கு உத்தரவிடப்பட்டுள்ளது என்பதை இந்த அவைக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல், ஈரோடு மாவட்டம், சென்னிமலை காவல் நிலைய சரகம், உப்பிலிபாளையம், ஓடைக்காடு பகுதியில் துரைசாமி மற்றும் அவரது மனைவி ஜெயமணி ஆகியோர் 30–4–2022 அன்று அவர்களது தோட்டத்து வீட்டின் வெளிப்பகுதியில் உறங்கிக் கொண்டிருந்திருக்கிறார்கள். அப்போது அடையாளம் தெரியாத நபர்கள் அந்த இருவரையும் தாக்கிவிட்டு, அவர்கள் அணிந்திருந்த தங்க நகைகளைத் திருடிச் சென்றிருக்கிறார்கள். இச்சம்பவத்தில், காயமுற்ற துரைசாமி சம்பவ இடத்திலேயே உயிரிழந்த நிலையில், அவரது மனைவி ஜெயமணி பெருந்துறை அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

அதேபோன்று, திருப்பூர் மாவட்டம், காங்கேயம் காவல் நிலைய சரகம், தம்மரெட்டிப்பாளையத்தில் பழனிச்சாமி மற்றும் அவரது மனைவி வள்ளியம்மாள் ஆகியோர் அவர்களுக்குச் சொந்தமான ரெட்டிப்பாளையத்தில் உள்ள தோட்டத்து வீட்டில் குடியிருந்து வந்திருக்கின்றனர். அவர்கள் தங்களது வீட்டின் வெளியே உறங்கிக்கொண்டிருந்தபோது, அடையாளம் தெரியாத நபர்கள் அவர்களைத் தாக்கி கொலை செய்து, வள்ளியம்மாள் அணிந்திருந்த சுமார் ஏழரை சவரன் தங்க நகைகளை திருடிச் சென்றிருக்கிறார்கள்.

இந்த இரண்டு சம்பவங்கள் தொடர்பாக காவல் துறையினர் வழக்குப் பதிவு செய்து, இதற்கென தனிப்படைகள் அமைக்கப்பட்டு இக்குற்றச் செயல்களில் ஈடுபட்டவர்களை அடையாளம் கண்டு, கைது செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்த இரண்டு சம்பவங்கள் குறித்த முதல் கட்ட விசாரணையில், தாக்குதல் நடந்த விதம் மற்றும் கொள்ளையடிக்கப்பட்ட முறை ஒன்றுபோல் இருப்பதால், இந்த இரண்டு சம்பவங்களில் ஒரே குற்றக் கும்பல் ஈடுபட்டிருக்கலாம் என்றும் தெரிய வருகிறது. இதுகுறித்து கோயம்புத்தூர் சரக காவல் துறைத் துணைத் தலைவர் அவர்கள் தலைமையிலே, காவல் துறையினர் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். விரைவில் குற்றவாளிகள் கைது செய்யப்படுவார்கள்.

இதுபோன்ற குற்றச் சம்பவங்களைப் பொறுத்தவரையில், காவல் துறையின் சார்பில் அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டும், ஒருசில குற்றச் சம்பவங்களில் ஈடுபட்டவர்களைக் கண்டுபிடிக்க இயலாத நிலை கடந்த காலங்களிலும் இருந்துள்ளது. இருந்தாலும், இதுகுறித்து காவல் துறை விசாரணை நடைபெற்று வருவதால்,

இதற்கு மேல் இதுபற்றிப் பேசி, நான் அரசியலாக்க விரும்பவில்லை. ஆகவே, உரிய நடவடிக்கை நிச்சயமாக, விரைவில் எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11–30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி அவர்கள்.*

திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில். . .* (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *கொலை வழக்கு பதிவு செய்யச் சொன்னீர்கள்; பதிவு செய்யப்பட்டுவிட்டது.* (குறுக்கீடு) *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், கேளுங்கள்.*

திரு. எடப்பாடி K. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விக்னேஷ் மரணத்தில் பல்வேறு சந்தேகங்கள் எழுந்துள்ளன. அரசு முதலிலே தெரிவித்த கருத்து வேறு; தற்போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், உடலில் பல்வேறு காயங்கள் ஏற்பட்டு இறந்ததாகத் தெரிவித்திருக்கின்றார்கள்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *ஒரு நிமிடம். நீங்கள் முதலமைச்சராக இருந்திருக்கிறீர்கள். அரசு முதற்கட்டத்தில் உடற்கூறு ஆய்வு முடிவிற்குப் பிறகு நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெளிவாகச் சொல்லியிருக்கிறது. அதேபோல் இன்று உடற்கூறு ஆய்வுக்குப் பின் 4 நபர்கள்மீது கொலை வழக்காகப் பதிவு செய்யப்பட்டு,* CBCID*–க்கு மாற்றப்பட்டுள்ளது. வேறு என்ன கேட்கிறீர்கள்?* (குறுக்கீடு)

திரு. எடப்பாடி K. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதற்கு நீங்களே பதில் சொல்லிவிட்டால் எப்படி?*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த அவையில் தெரிவித்ததைத்தான் நான் இங்கே உங்களுக்கு* repeat *செய்தேன். நீங்கள்தான் கொலை வழக்காகப் பதிவு செய்ய வேண்டும் என்று சொன்னீர்கள். ஆக, பதிவு செய்தாகிவிட்டது. வேறு என்ன கேட்கிறீர்கள்?*

திரு. எடப்பாடி K. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வழக்கில் பல்வேறு சந்தேகங்கள் இருக்கிற*

2022 மே 6] [திரு. எடப்பாடி K. பழனிசாமி]

காரணத்தினால், இந்த வழக்கை CBI–யிடம் ஒப்படைக்க வேண்டும் என்று நாங்கள் வலியுறுத்தியிருக்கிறோம். ஆனால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் CBCID–யிடம்தான் ஒப்படைக்கப்படும் என்று தெரிவித்திருக்கின்றார்கள். ஆகவே, எங்களுக்கு இதில் உடன்பாடு இல்லை. இந்த வழக்கு முழுமையாக, நேர்மையாக நடைபெற வேண்டுமென்றால், CBI வசம் ஒப்படைத்தால்தான் இந்த வழக்கு நேர்மையாக நடத்தப்படும். குற்றவாளிகளுக்குத் தகுந்த தண்டனை பெற்றுத் தர முடியும். ஆகவே, எங்களுடைய கோரிக்கையை ஏற்காத காரணத்தினால் நாங்கள் வெளிநடப்பு செய்கிறோம்.

(அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த உறுப்பினர்கள் அனைவரும் வெளிநடப்புச் செய்தனர்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நீங்கள் என்ன கேட்டீர்களோ, அதனை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் செய்துள்ளார்கள்.*

(ஆ) காவேரியின் உபரிநீரை நீரேற்றுமூலம் ஒகேனக்கல் வழியாக தருமபுரி மாவட்டத்திற்குக் கொண்டு வருதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி அவர்கள்.*

திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி மாவட்டம், விவசாயத்தையே நம்பியிருக்கிற, வறட்சியான, மிகவும் பின்தங்கிய மாவட்டம். தமிழ்நாட்டினுடைய சராசரி மழையளவு 987 மி.மீட்டர்; ஆனால், தருமபுரி மாவட்டத்தினுடைய ஆண்டு சராசரி மழையளவு 853 மி.மீட்டர். ஆக, மழையளவில் குறைந்த மாவட்டம்; பெரிய பாசனத் திட்டங்கள் இல்லாத மாவட்டம். அங்கே சுமார் 555 ஏரி, குளம், குட்டைகள் இருக்கின்றன. அதிக மழை பெய்யாத காலங்களில், இவை நிரம்ப இயலாத சூழ்நிலையும் இருந்து கொண்டிருக்கிறது. இங்கே பெரும் பாசனத் திட்டங்கள் இல்லாத காரணத்தினால், எல்லா விவசாயிகளும் மானாவாரிப் பயிர்களையே, குறிப்பாக ராகி, கம்பு, சோளம், சாமை உள்ளிட்ட பயிர்கள்; அதைத் தவிர உளுந்து போன்ற பயறு வகைகளைச் சாகுபடி செய்து வாழக்கூடிய பின்தங்கிய மாவட்டம். பெரிய பாசனத் திட்டங்கள் இல்லாத ஒரு மாவட்டமாக இருக்கின்றது. இங்கே இருக்கின்ற மொத்த விவசாயக் குடும்பங்கள் 2,10,300; இதில் 1,90,000 குடும்பங்கள், குறு சிறு, விவசாயிகள். இங்கே வேலையில்லை; எந்தத் தொழில்*